**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

**தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## IFB No: ITM/2/1/02/03/2025/NCB/03

1. விலைமனு ஆவணத்தில் அட்டவணை (பிரிவு V) தேவையில் குறிப்பிடப்பட்டவாறு நிதி அமைச்சுக்காக சேர்வர்களின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

   விநியோகம் மற்றும் செயற்படுத்தல் காலம்: ஒப்பந்தம் வழங்கும் திகதியில் இருந்து 01 மாதமாகும்.

2. தேசிய பெறுகை வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும் என்பதோடு வழிகாட்டல்களில் வரையறுக்கப்பட்டவாறு அனைத்து தகுதி பெற்ற விலைமனுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.

3. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் தொலைபேசி இல. 0112-484519, கொழும்பு 01 செயலகம், நிதி அமைச்சு, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம், பணிப்பாளர் (நிதி), திரு டி.பி.ஜி. பிரதீப் அவர்களிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2025 ஒக்டோபர் 31 ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.30 வரை கீழ் தரப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

4. தகைமைகள்

   i. விலைமனுதாரர் கடந்த ஐந்து (05) ஆண்டுகளுக்குள் பத்து மில்லியன் இலங்கை ரூபாவுக்கு (இ.ரூபா 10,000,000) குறையாத பெறுமதி உடைய ஒப்பந்தம் ஒன்றுடன் சேர்வர்களின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் தொடர்பில் குறைந்தது ஒரு (01) இதனையொத்த திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

   ii. விலைமனுதாரர் கடந்த மூன்று (03) நிதி ஆண்டுகளில் குறைந்தது இலங்கை ரூபா நூறு மில்லியன் (இ.ரூபா 100,000,000) சராசரி ஆண்டுப் புரள்வை பெற்றிருத்தல் வேண்டும். கூறப்பட்ட காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக கிடைக்கப்பெற்ற மொத்த உறுதி செய்யப்பட்ட கொடுப்பனவுகள் அடிப்படையில் இந்தப் புரள்வு மதிப்பீடு செய்யப்படும். இதனை சரிபார்ப்பதற்கு கடந்த மூன்று நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

   iii. விலைமனுதாரர் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் உறுதி செய்யப்பட்ட இலங்கை ரூபா இருபது மில்லியனுக்கு (இ.ரூபா 20,000,000) குறையாத நிதி வழங்கல்கள் அல்லது கடன் வசதிகளை பெறுவதை நிரூபித்தல் வேண்டும்.

   iv. நிறுவுதல் மற்றும் உதவிக்காக கல்விசார் மற்றும் தொழில்நுட்ப தகைமைகளை பெற்ற நபர்களை விலைமனுதாரர் பெற்றிருத்தல் வேண்டும்.

5. மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000 ரூபாவை (10,000 இ.ரூபா) செலுத்தி கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்களை 2025 நவம்பர் 20 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2025 நவம்பர் 20 ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு கீழுள்ள முகவரியில் நேரடியாக அல்லது ஒன்லைனில் பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் ரூபா 600,000 (இ.ரூபா 600,000) விலைமனுப் பிணை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. 2025 நவம்பர் 10 ஆம் திகதி பி.ப. 02.00 இற்கு நிதி அமைச்சு, , தரைத் தளம், ITMD கேட்போர்கூடத்தில் இடம்பெறும் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் சாத்தியமுடைய விலைமனுதாரர்கள் பங்கேற்கலாம்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்**
**நிதி அமைச்சு,**
**அறை இல. 27,**
**செயலகம், கொழும்பு 01**

**2025 ஒக்டோபர் 31**